# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –I (2015 -16)

## TAMIL - CLASS –VIII

### தமிழ் - எட்டாம் வகுப்பு

Time :- 3 Hours | Maximum Marks :- 90

நேரம் :- 3 மணி | மதிப்பெண்கள் :- 90

---

**The Question Paper is divided into four Sections.**

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| **SECTION :- A** | **Reading & Writing** | **- 26 Marks** |
| பிரிவு :- அ | படித்தல் மற்றும் எழுதுதல் | - 26 மதிப்பெண்கள் |
| **SECTION :- B** | **Grammar** | **- 15Marks** |
| பிரிவு :-ஆ | இலக்கணம் | - 15மதிப்பெண்கள் |
| **SECTION :- C** | **Literature & Textbooks** | **- 33Marks** |
| பிரிவு :- இ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்கள் | - 33மதிப்பெண்கள் |
| **SECTION :- D** | **Memory Parts & Non Detail** | **- 16Marks** |
| பிரிவு :- ஈ | மனனப்பகுதி & துணைப்பாடம் | - 16மதிப்பெண்கள் |

---

- எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.
- வினாக்களுக்குரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- வினாத்தாள் பக்கங்களைக் கொண்டது.

---

## பிரிவு–அ

**அ. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

காவிரி ஆறு இந்தியத் தீபகற்பத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது கர்நாடக மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை உள்ள குடகு மாவட்டத்தைச் சேர்ந்த தலைக்காவிரி என்ற இடத்தில் 4400 அடி உயரத்தில் தோன்றுகிறது. இதன் நீளம் 800 கி.மீ. ஆகும். கர்நாடகத்தில் உள்ள சில மாவட்டங்கள் வழியாகவும், தமிழகத்தில் தர்மபுரி , சேலம் , ஈரோடு , நாமக்கல் , கரூர் , திருச்சி , தஞ்சாவூர் , நாகப்பட்டினம் மாவட்டங்கள் வழியாகச் சென்று

பூம்புகார் எனும் இடத்தில் வங்காளவிரிகுடா கடலில் கலக்கிறது. காவிரி ஆறு ,' பொன்னி ஆறு' என்றும் அழைக்கப்படுகிறது.ஏனெனில் அதன் நீரில் அடங்கியிருந்த தாதுக்களில் தங்கத்தாது சற்று அதிக அளவில் இருந்திருக்கிறது. தமிழகம் வரும் காவிரியானது பீலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல் அருவியை அடைகிறது. பின் மேட்டூர் அணையை அடைந்து ஸ்டான்லி நீர்த்தேக்கத்தை உருவாக்குகிறது. காவிரி ஆற்றின் மீது மேட்டூர் அணை ,கிருஷ்ணசாகர் அணை, கல்லணை மற்றும் மேலணை போன்ற அணைகள் கட்டப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் சிவசமுத்திர அருவியும் ,தமிழகத்தில் ஒகேனக்கல் அருவியும் காவிரியில் உள்ள இரு அருவிகளாகும்.

<u>வினாக்கள் :-</u>

1.காவிரி ஆற்றின் மீது கட்டப்பட்ட அணைகள் யாவை ?

2.காவிரி ஆறு பாயும் தமிழக மாவட்டங்கள் யாவை ?

3.பொன்னி ஆறு என அழைக்கப்பெறுவது எது ? ஏன் ?

4.காவிரி ஆற்றின் தோன்றல் பற்றி எழுதுக.

5.அ.காவிரி ஆறு ______________ என்னும் இடத்தில் வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.

ஆ.மேட்டூர் அணையில் ___________ நீர்த்தேக்கத்தை உருவாக்குகிறது.

ஆ.கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் <u>ஒன்றிற்கு கட்டுரை</u> எழுதுக. 1 x 8= 8

1.விலங்கியல் பூங்கா

2.நான் விரும்பும் தலைவர்

இ.களவுபோன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு <u>காவல்துறை ஆய்வாளருக்குக் கடிதம்</u> ஒன்று எழுதுக. 1 x 8= 8

## <u>பிரிவு-2</u>

**<u>இலக்கணம் :-</u>** **15 x 1 = 15**

### <u>அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

1.வடசொல்

அ.பெற்றம் ஆ.கமலம் இ.மலை ஈ.கதிரவன்

2.நிறப்பண்புப்பெயர்

அ.வெந்நீர் ஆ.குறுங்கோல் இ.செந்தாமரை ஈ.நாற்காலி

3.சினையாகு பெயர்

அ.வெள்ளை அடித்தான் ஆ.வெற்றிலை நட்டான்

இ.வறுவல் தின்றான் ஈ.டிசம்பர் சூடியாள்

## ஆ.தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

4.உகிர் என்பது ____________________

அ.நகம் ஆ.பல் இ.பசு ஈ.கிணறு

5.ஒரு இடத்தின் பெயர் சினைக்கு ஆகி வருவது _____________

அ.பொருளாகு பெயர் ஆ.இடவாகு பெயர்

இ.காலவாகு பெயர் ஈ.குணவாகு பெயர்

6.ஒரு பொருள் செய்யும் தொழிலை உணர்த்தும் பெயர் ___________________

அ.பொருட்பெயர் ஆ.சினைப்பெயர் இ.காலப்பெயர் ஈ.தொழிற்பெயர்

## இ.அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7.மல்லிகைச் சூடினாள் ( எவ்வகை ஆகுபெயர்? )

அ.தொழிலாகு பெயர் ஆ.காலவாகு பெயர்

இ.முதலாகு பெயர் ஈ.இடவாகு பெயர்

8.நல்குரவு ( எவ்வகை இலக்கியச்சொல்? )

அ.பெயர் திரிசொல் ஆ.வினை திரிசொல் இ.திசைச்சொல் ஈ.வடசொல்

9.ஆறுமுகத்தான் ( எவ்வகைப் பண்புப் பெயர் ?)

அ.வடிவப் பண்புப்பெயர் ஆ.அளவு பண்புப்பெயர்

இ.குணப் பண்புப்பெயர் ஈ.நிறப் பண்புப்பெயர்

## ஈ.தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

10.நிலவு

அ.பெயர் இயற்சொல் ஆ.பெயர் திரிசொல்

இ.திசைச்சொல் ஈ.வடசொல்

11.பேறு

அ.விகுதிபெற்ற தொழிற்பெயர் ஆ.முதனிலைத் தொழிற்பெயர்

இ.முதனிலைத்திரிந்த தொழிற்பெயர் ஈ.இடப்பெயர்

12.நீலம் சூடினாள்

அ.பண்பாகு பெயர் ஆ.காலவாகு பெயர்

இ.தொழிலாகு பெயர் ஈ.பொருளாகு பெயர்

<u>உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

13.அ.ஆகுபெயர் பன்னிரண்டு வகைப்படும்.

ஆ.ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

இ.ஆகுபெயர் பத்து வகைப்படும்.

ஈ.ஆகுபெயர் ஆறு வகைப்படும்.

14.அ.தண்ணீர் - குணப்பண்புப்பெயர்

ஆ.தண்ணீர் - நிறப்பண்புப்பெயர்

இ.தண்ணீர் -சுவைப்பண்புப்பெயர்

ஈ.தண்ணீர் -அளவுப்பண்புப்பெயர்

15.அ.செல்கை – விகுதிபெற்ற தொழிற்பெயர்

ஆ. செல்கை – முதனிலைத் தொழிற்பெயர்

இ. செல்கை – முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

ஈ. செல்கை – காலப்பெயர்

## பிரிவு -3

**அ. பொருள் கூறுக. (மூன்று மட்டும்)** 3

1. ஆவணம் 2. வையகம் 3. வன்பாற்கண் 4. பண்

**ஆ. எதிர்ச்சொல் தருக. ( மூன்று மட்டும்)** 3

1. நண்பு 2. வற்றல் 3. இயற்கை 4. விருப்பு

**இ. பிரித்து எழுதுக. ( இரண்டு மட்டும்)** 2

1. அருந்தமிழ் 2. ஆருயிர் 3. வியப்பூட்டும் 4. ஓய்வின்றி

**ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2

1. இராமலிங்க அடிகளாரின் சிறப்புப் பெயர் ________________

2. திருக்குறள் ____________________ நூல்களுள் ஒன்று.

**உ. பொருத்துக.** 2

1. வள்ளலார் - திருநெல்வேலி

2. பழவேற்காடு - இராமநாதபுரம்

3. உ.வே.சா. நூலகம் - மருதூர்

4. கூந்தன்குளம் - திருவள்ளூர்

சென்னை , பெசண்ட் நகர்.

**எ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5

1. இராமலிங்க அடிகளார் எழுதிய நூல் எது ?

அ. திருக்குறள் ஆ. திருவருட்பா இ. திருக்குற்றாலக் குறவஞ்சி

2. இவர் தமிழ்த்தாத்தா என அழைக்கப்படுகிறார்.

அ. வ.உ.சி ஆ. ஈ.வே.ரா இ. உ.வே.சா

3. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் ______________

அ. 1330 ஆ. 133 இ. 1333

4. பெரிய ஏரி (பறவைகளின் புகலிடம்) அமைந்துள்ள ஊர் எது ?

அ. கூடன்குளம் ஆ. கூத்தா நல்லூர் இ. கூந்தன்குளம்

5.ஓலைச்சுவடிக்கு கீழ்க்கண்ட ஓலை தான் பயன்படுத்தப்பட்டது.

அ.பனை ஓலை ஆ.தென்னை ஓலை இ.ஈச்ச ஓலை

<u>ஏ.எவையேனும் நான்கனுக்குக் குறுகிய விடையளிக்க.</u> 8

1.இராமலிங்க அடிகளார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை ?

2.குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் யார் ?அவற்றில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை எத்தனை ?

3.உ.வே.சா பதிப்பித்த நூல்களில் ஏதேனும் நான்கினை எழுதுக.

4.அன்பில்லாத வாழ்க்கை தளிர்க்காது - எதைப் போல ?

5.வலசை போதல் என்றால் என்ன ?

6.சமவெளி மரங்களில் வாழும் பறவை எது ? மின்சிட்டு எப்பகுதியில் வாழும் ?

<u>ஐ. எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடையளிக்க.</u> 8

1.பறவைகளை எத்தனை வகைகளாளப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

2.அன்புடையாரின் சிறப்புகள் யாவை ?

3.குறிஞ்சிப்பாட்டை பதுப்பிக்க உ.வே.சா எடுத்துக் கொண்ட முயற்சி பற்றி எழுதுக.

4.கூந்தன்குளம் பற்றி எழுதுக.

## <u>பிரிவு -4</u>

<u>அ.அடிமாறாமல் எழுதுக.</u>

1.' கண்ணில்' - எனத்தொடங்கும் திருவருட்பா பாடலை எழுதுக. 4

2.' என்பில்' - எனத்தொடங்கும் குறளை எழுதுக. 2

3.' பிறர்க்கு' - என முடியும் குறளை எழுதுக. 2

ஆ.பாம்புகளின் இயல்பு பற்றி இருபது வரிகளில் <u>துணைப்பாடக் கட்டுரை</u> எழுதுக. 8

*********************